# 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் மின்சார இருசக்கர வாகனங்கள் வாடகைக்கு அறிமுகம்

சென்னை, ஜன.19: ஆலந்தூர், நந்தனம், கிண்டி, சின்னமலை ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து பயணிகளின் வசதிக்காக மின்சார இருசக்கர வாகனங்கள் (ஸ்கூட்டர்கள்) வாடகைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த ஓராண்டில் 6,000 இருசக்கர வாகனங்களை வாடகை முறையில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.



சென்னையில் வண்ணாரப்பேட்டை-விமானநிலையம்வரையிலான முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையிலான இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த இரண்டு வழித்தடங்களில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் தினமும் சராசரி 95 ஆயிரம் முதல் ஒரு லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து அருகில் உள்ள பேருந்து நிலையங்கள், புறநகர் மின்சார ரயில் நிலையம், பறக்கும் ரயில் நிலையங்களோடு இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, கார் போன்ற இணைப்பு வாகன சேவைகள் இயங்கி வருகின்றன.

இதேபோல, பல்வேறு வழித்தடங்களில் சிறிய பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் பயணிகளை ஊக்குவிக்கவும், அதிகப்படுத்தவும் தொடர்ந்து பல்வேறு வசதிகள் விரிவுப்படுத்தப்படுகின்றன.

இதற்கிடையில், ப்ளை (flyy) என்னும் தனியார் நிறுவனத்தின் மூலம், மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்குச் செல்ல வாடகை மின்சார இருசக்கர வாகனங்கள் இயக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது ஆலந்தூர், நந்தனம், கிண்டி, சின்னமலை ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்களை வாடகைக்கு விடும் முறை சனிக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: ப்ளே செயலி மூலமாக இந்த வசதியை பெற முடியும். இந்தச் சேவையானது, தினமும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை வழங்கப்படும். அடுத்த ஓர் ஆண்டில் 6,000 இருசக்கர வாகனங்களை மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து வாடகை முறையில் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.